# இலுப்பைக் கடவை

# முத்துமாரியம்மன்

# ஆசிரிய விருத்தம்



"வெண்பிறை முடித்த வேணி
விண்ணவ ரன்பி லாத
பண்பின ரெனினுந் தம்மைப்
பாடினர்க் கிரங்கு வார்"

—கடவுண்மாமுனிவர்

# இலுப்பைக் கடவை முத்துமாரியம்மன் ஆசிரிய விருத்தம்



வ. கோவிந்தபிள்ளை

# இலுப்பைக்கடவை முத்துமாரியம்மன்

# ஆசிரிய விருத்தம்

## காப்பு

சொல்வளங்கள் சூழ்ந்த பதியாம் இலுப்பைநகர்
நல்நகராமென்றே நயந்துறையும் - தொல்புகழ்சேர்
அம்மைமுத்து மாரி அருட்பதத்தைப் பாடுதற்குக்
கைம்மா முகன்கழலே காப்பு.

# சீர்கொண்ட நிலவளம்...

சீர்கொண்ட நிலவளம் நீர்வளங் கலைவளஞ்
செப்பரிய நிதிவளஞ்சேர்
செம்மைமிகு நாடென்று சிந்தையிற் கருதியே
சிறப்புடன் இலுப்பைநகரில்
ஏர்கொண்ட மதிபூத்த வெழில்கொண்ட வதனமுட
னினிதா யமர்ந்துறையவும்
என்னதவ மிப்புவியி லிங்குளார் செய்தமோ
ஏதென் றுரைக்கவறியேன்
கார்கொண்டவிண்டலம் பொழிகின்ற தாரையெனக்
கருணைபல புரியுமுன்பால்
கடியதொரு சூறையெனு மிடிமைபல மோதிடக்
கதறியழு துனைநாடிடத்
தார்கொண்ட வழகொழுகு மம்மையே தயைகூர்ந்து
தரியா தவர்க்கருளுமுன்
றனைநாடி வந்தயிவ் வேழைதுயர் தீர்த்திடாய்
தயாபரீ முத்துமாரி.

# சந்தமுமுனது புகழ்...

சந்தமு முனதுபுகழ் பாடித் துதித்திடுஞ்
சான்றோர்க ளொருபக்கலுஞ்
சதுர்வேத மாறங்கம் பதினெண் புராணங்கள்
சாற்றுவோ ரொருபக்கலும்
வந்தனைகள் பலசெய்து மலர்தூவி யர்ச்சித்து
வாழ்த்துவோ ரொருபக்கலும்
வண்மைமிகு தானங்கள் நின்தல மதிற்செய்ய
வருபவர்க ளொருபக்கலும்
இந்தவித மெல்லோரு மேற்றித் துதிக்கவுனை
ஏழையா னிப்புவியிலே
இடருண்டு மிடியுண்டு தாய்தந்தை யில்லா
திளஞ்சிறுவன் போல்வருந்தி
நொந்துநின் றழுகின்ற குரலென்ன கேட்குமோ
நுவலுவே னெவர்க்கிதனையே
நோய்நீக்கி யாளுவாய் இலுப்பைநக ருறைகின்ற
சோதியே முத்துமாரி.

# வண்டுபயில் தாருலவும்....

வண்டுபயில் தாருலவுங் குழலோடு மாசற்ற

மதியுலவு மெழில்வதனமும்

வடிவமுல விடுதண்டை கலகலெனக் கவினுலவு

வளையல்கர மதிலுலவவும்

எண்டிசைத் தேவர்களு மேத்திப் புகழ்ந்திடு

மிலங்குநுதற் றிலகமுலவ

இப்படியி லிப்படிவம் யாவருள ரென்றமர

ரெண்ணமுல விடுமேனியுங்

கொண்டடிய வர்க்கருளு மெண்வகைச் செல்வமுங்

கொடுக்கவென முறுவலுலவக்

குவலயம் விளங்கவென வெழுகின்ற பரிதியின்

கோடிப்பிர காசமோடு

தண்டலைகள் மிகமிளிருந் தரணிபுகழ் இலுப்பைநகர்

தன்னிலே மருவிநிதமும்

தனைநாடு மன்பர்க்கு மிகவுமருள் புரியவுறை

தயாபரீ முத்துமாரி.

# வையகம் முழுவதும்....

வையகம் முழுவதுந் தன்கையி லுளதென்று
மற்கட்டி நின்றவவுணன்
வாய்த்தநற் றவமுடைய தேவரைச் சிறைசெய்து
வருத்தித் திரிந்தஞான்றே
ருய்யவழி யறியாம லோலமிட் டலறியே
யுனைநாடி வந்தபோழ்தே
உவப்புடன் அவர்கள் துயர் தீர்த்துவைத் தாயென்ப
துண்மையது வாகுமென்றாற்
செய்யும்வகை யறியாது புலியினது வாயிலே
சிக்கித் தவிக்குமான்போற்
சித்தமிக மெலிவுற்றுத் துன்பமே யுருவான
சிலையாக வாழுமென்னை
உய்யவழி காட்டியே யுன்மலர்ப் பாதத்தை
யுன்னவும் அருள்நல்குவாய்
உவப்புடன் இலுப்பைநகர் றுறைகின்ற அம்மையே
உள்ளநிறை முத்துமாரி.

# சீருலவும் இலுப்பைநகர்....

சீருலவும் இலுப்பைநகர் கள்ளியடி கன்னாட்டி
சிறந்தநல் முதலியாகமம்
செப்பரிய கட்டாடி வயலாத்தி மோட்டையுடன்
செம்மைமிகு புதுக்குளஞ்சேர்
பாருலவு கூளிகமம் வெள்ளாங் குளம்மெனும்
பதியோடு கோவிற்குளம்
பாவிடும் உனதடியர் தீப்பிணி யகற்றிடப்
பாங்குடன் முத்தெடுத்தே
நீருலவு விடத்தல்தீ வெனுப் பதிக் கேகையில்
நீற்றையெதிர் சமயமாந்தர்
நீள்கத்தி வாள்துவக் கொடுதெருவி லுனைமறித்
தேகவிட மாட்டோமெனப்
பேருலவ அண்டமும் கிடுகிடென ஹூங்காரம்
பெருநோய்கள் மலியநொந்தே
பேணுவா யெனவிரந் தவர்கள்துயர் தீர்த்தநற்
பெற்றிமிளிர் முத்துமாரி.

# எண்ணரியமீன்....

எண்ணரிய மீன்களும் வானமும் பரிதியும்
இனிமைதரு மாருதமும்நீ
ஈரேழு புவனமும் மறைநான்கின் அந்தமும்
இரவும்நீ பகலும்நீயே
வண்ணமுறு வெண்ணிலவு சூழ்ந்துவரு மேகத்தின்
வளர்பிறையும் வானவில்லும்
வாரிதியி லேதுள்ள மலைகளொடு புனலும்நீ
வளர்கின்ற எழில்மலரும் நீ
மண்மீது லாவிவரு ஜீவகோ டிகளோடு
மரங்களுஞ் செடிகொடிகளும்
மகமாரி நின்கிருபை யின்றியணு வசையுமோ
வையகந் தனிற்கணமெனுந்
தண்ணளி சுரந்துனருள் நாடுமெமை யீடேற்றத்
தரணிபுகழ் இலுப்பைநகரைத்
தலைநக ரெனக்கொண்டு மிகவுமருள் புரியவுறை
தயாபரீ முத்துமாரி.

# பொங்குமாகடல்....

பொங்குமா கடலெனத் துன்பமின் றென்னையே
புயலாய்ச் சுழன்றடிக்கப்
போகுமிட மறிகிலேன் யார்க்குரைப் பேனிதைப்
புவியுளார் செவிமடுக்கார்
தெங்காயி னுங்கயவ ருப்புநீர் வார்க்கினுந்
தெவிட்டாத நன்னீரதாய்த்
தேக்கிக் கொடுக்கின்ற தன்மையைக் கண்டுமுன்
சித்தமிள காததென்னே
எங்குயா னேகுவே னின்முகங் காட்டிநீ
யென்னையா தரித்திடாயேல்
இப்புவியில் வாழ்கின்ற தாய்க்குலம் மிகமுமே
இரக்கமில் லன்னையென்றே
சங்கோல மிடுகின்ற வயல்சூழ் இலுப்பைநகர்
தன்னிலே மருவிநிதமும்
தனைநாடி வருமன்பர் துயர்நீக்கி யாள்கின்ற
தயாபரீ முத்துமாரி.

# ஆயிரம் நாட்கள்....

ஆயிரம் நாட்கள்தா னுன்னடியை நினையாம
லவனிமிசை பாதகங்கள்
அனைத்தையுந் தொழிலதாய்க் கொண்டுவாழ் கின்றசீ
ரறிவிலா மாந்தர்கூடத்
தாயிரங் கென்றுநின் நாமமே சரணென்று
தஞ்சம் புகுந்துவிட்டாற்
றரியாம லவர்கள்துயர் தீர்த்திந்த வுலகிலே
சற்சனர்க ளாக்கிவைப்பாய்
பேயாக அலைவுற்று நானின்று வாடியே
பேசவும் வலிமையற்றே
பேறென்று மில்லாமல் நினதுமலர்ப் பாதமே
பெருமைதரு மென்றெண்ணினேன்
தாயேயிவ் வுலகிலே யான்செய்த பாதகந்
தனையெலாம் பொறுத்தருளுவாய்
தரணிபுகழ் இலுப்பைநகர் தனைமருவி யருள்புரியும்
தயாபரீ முத்துமாரி.

# மாயம் நிறைந்துள்ள....

மாயம் நிறைந்துள்ள விவ்வுலகி லேவந்து
வகைகெட் டுழன்றபோதும்
மயல்கொண்டு நினைவின்றி யுனையென்று மெண்ணாது
மால்கொண் டுழன்றபோதும்
நேயஞ் சுரந்தெனது நீங்காத மம்மர்பல
நீக்கிவைத் தன்னையைப்போல்
நெடுநாளு மெனதோடு முறவாடி மகிழ்வோடு
நின்றதற் கென்புரிகுவேன்
ஆயந் திகழ்ந்தொளிரு தாரா கணங்களென
வவனிமிசை யுன்கருணையை
யன்பர்க்கு வெகுவாக வுளமகிழ்ந் தனுதினமு
மளிக்கின்ற தன்மையென்னே
தாயெங்கள் புவிமீதில் நீயின்றி வாழ்வமோ
தரணிபுகழ் இலுப்பைநகரைத்
தலைநகரெனக்கொண்டு மிகவுமருள் புரியவுறை
தயாபரீ முத்துமாரி.

# பேரான சோலையும்....

பேரான சோலையும் வாவியுங் கடல்களும்
பெருகிநித மணிசெய்திடப்
பெட்புமிகு சீர்கம்ப காளியொடு காத்தனும்
பிரியமுடன் சூழவருக!
நேரான வெள்ளிப் பிரம்பொடே ஒளிறுவாள்
நிதமேந்து மம்மைவருக!
நிலையான கொடியபிணி மாருத கிரகநோய்
நீங்கவே கடிதில்வருக!
சீரான செங்கையில் வேப்பிலையை யேந்தியே
சிந்தைபூ ரிக்கவருக!
சிந்தைமிக நொந்துனருள் தேடுமன் பர்க்கருளச்
செகமதில் விரைந்துவருக!
வாரா திருந்திடில் ஏழையேம் என்செய்வேம்
வந்துநீ யருள்புரிகுவாய்
வளமோடு புகழோங்கு மிலுப்பைநக ருறைகின்ற
மகமாரி முத்துமாரி.

செய்தி அச்சகம்,
241, கொழும்பு வீதி,
கண்டி